மின்னிதழ் E-paper
ஈழநாடு
Eelanadu
23.06.2020 செவ்வாய்க்கிழமை

# கருணா இன்று சி.ஐ.டிக்கு!

கொழும்பு, ஜூன் 23
குற்றப் புலனாய்வுப் பிரி வில் முன்னிலையாகுமாறு விடுக்கப்பட்ட அழைப்புக் கிணங்க இன்று நேரில் முன்னிலையாகி கருணா வாக்கு மூலம் வழங்க உள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.
ஒரே இரவில் 2000 முதல் 3000 வரையான படையினரை ஆனையிறவில் கொன்ற நான் கொரோனாவை விட மோசமானவன் எனக் கிழக்கில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் கருணா வெளியிட்ட கருத்து


02

# கூட்டமைப்புக்கே வாக்கு திடமாக உள்ளனர் மக்கள்!

## உறுதிபடக் கூறுகின்றார் புளொட் தலைவர் சித்தார்த்தன்

யாழ்ப்பாணம்,ஜூன் 23
“இம்முறை தேர்தலில் கடுமையான போட்டி இருக்கும் என நினைத்தேன். ஆனால் மக்களுடன் பேசிய போது அவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிக்கவேண்டும் என்பதில் மிகத் திடமாக உள்ளார்கள் என்பதை உணரகூடியதாக இருந்தது.”
-இவ்வாறு கூறியிருக்கிறார் புளொட் அமைப்பின் தலைவரும், வேட்பாளருமான த.சித்தார்த்தன்.

02



# வாக்குறுதியிலிருந்து விலகியது இலங்கை!

## ஐரோப்பிய ஒன்றியம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 23
பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவது தொடர்பான இலங்கை வழங்கியிருந்த வாக்குறுதியில் இருந்து விலகிச் சென்றுள்ளதாக, ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.
2019ஆம் ஆண்டுக்கான, மனித உரிமைகள் மற்றும் உலகில் ஜனநாயகம் தொடர்பாக, ஐரோப்பிய ஒன்றியத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு கூறப்பட்டுள்ளது.
ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி .சலுகையை மீளப் பெற்றுக் கொள்வதற்கான பேச்சுக்களின் போது, பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவதாக, இலங்கை அரசு வாக்குறுதி அளித்திருந்தது என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
எனினும், அந்த வாக்குறுதியில் இருந்து இலங்கை பின்வாங்கியிருப்பதாகவும், ஐரோப்பிய ஒன்றியம்

02

# நீர்வேலியில் வான் ரயர் வெடித்ததால் விபத்து!

யாழ்ப்பாணம், ஜூன் 23
பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணம் செய்த ஹையஸ் வானின், ரயர் வெடித்ததை அடுத்து, அந்த வான் வீதியை விட்டு விலகி, தென்னை மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.
நீர்வேலி கந்தசுவாமி கோயிலுக்கு அண்மையில் நேற்று நண்பகல் 12.30 மணியளவில் இந்தச் இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது.
இந்த விபத்தில், வான் கடுமையாகச் சேதமடைந்துள்ள போதும், வானில் பயணித்தவர்கள் காயங்கள் இன்றி தப்பியுள்ளனர்.

# கருணாவின் கட்சி உறுப்புரிமையை நீக்கவேண்டும்!

கொழும்பு, ஜூன் 23
இராணுவச் சிப்பாய்களைக் கொன்றார் எனக் கூறியுள்ள கருணாவின் உரை பாரதூரமானதெனத் தெரிவித்த ஐக்கிய தேசிய கட்சியின் செயலாளர் அகிலவிராஜ் காரியவசம், கருணாவின் கட்சி உறுப்புரிமையை நீக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமெனவும் தெரிவித்தார்.
ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையக மான சிறிகொத்தாவில் நடைபெற்ற ஊடகவிய லாளர்

02

# ஐ.தே.க உறுப்புரிமை நீக்கத்துக்கு தடை விதிக்க மறுப்பு!

கொழும்பு, ஜூன் 23
ஐக்கிய தேசியக் கட்சி 99 உறுப்பினர்களை கட்சியில் இருந்து இடைநிறுத்துவதற்கு எடுத்த முடிவுக்கு எதிராக, இடைக்கால உத்தரவைப் பிறப்பிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்றுத் தள்ளுபடி செய்துள்ளது.
ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து இடைநிறுத்தப்பட்ட 99 உறுப்பினர்களை இடைநிறுத்தும் முடிவுக்கு இடைக்காலத் தடை

02

# மரணச்சடங்கில் வாள்வெட்டு படுகாயமடைந்தனர் இருவர்!

யாழ்ப்பாணம், ஜூன் 23
இருபாலை மடத்தடிப் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.
இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.
மடத்தடிப் பகுதியில் மரணச் சடங்கு ஒன்று நேற்று இடம்பெற்றுள்ளது. இந்த மரணச் சடங்கில் இரு தரப்புக்கு இடையில்

02

# கைத்துப்பாக்கிகளைக் காட்டி மக்களை மிரட்டிய படையினர்

## நாகர்கோவிலில் நேற்றிரவு சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூன் 23
யாழ். வடமராட்சி கிழக்கு, நாகர்கோவில் பகுதியில் பீல்ட் பைக் மோட்டார் சைக்கிள்களில் வந்த படையினர் கைத்துப்பாக்கிகளைக் காட்டி தங்களை மிரட்டினர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
பருத்தித்துறை பிரதேச சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் ஆனந்தராசா சுரேஷ்குமார் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
நேற்றிரவு தாம் நாகர்கோவில் பகுதியில் நின்றிருந்தபோது அங்கு வந்த படையினர் தங்களைக் கைகளை மேலே தூக்குமாறு கைத்துப்பாக்கிகளைக்

02

# ஹூலை அனுமதிக்காதீர்!

கொழும்பு, ஜூன் 23
தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள் தொடர்பான நடவடிக்கைகளைத் தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர் ரட்னஜீவன் ஹூல் தலைமையில் முன்னெடுப்பதற்கு அனுமதி வழங்கக்கூடாது என பொதுஜன பெரமுனவின் தவிசாளர்

02

நயினாதீவு ஆலய விவகாரம்

# உடனடி விசாரணைக்கு பிரதமர் மஹிந்த பணிப்பு

கொழும்பு, ஜூன் 23
வரலாற்று சிறப்புமிக்க நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் புனிதத்தன்மைக்கு கடற்படையினர் மற்றும் பொலிஸ் அதிகாரிகளால், கேடு விளைவிக்கப்பட்டமை குறித்து, விசாரணை நடத்துமாறு, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.
நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் கொடியேற்றத் திருவிழா நேற்று முன்தினம் நடைபெற்றபோது, கடற்படையினர் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் ஆலயத்துக்குள், பாதணிகளுடன் நுழைந்திருந்தனர்.
இந்த நிலையில், நேற்றுக் காலை

02

## கொரோனா நிலவரம் அறிக்கை

| தொற்றாளர் | புதிய தொற்றாளர் | சிகிச்சை பெறுவோர் | சந்தேகநபர்கள் | குணமடைந்தோர் |
|---|---|---|---|---|
| 1,951 | 01 | 414 | 31 | 1,526 |

இறப்பு 11

மூலம் : சுகாதார மேம்பாட்டு பணியகம்

## கூட்டமைப்புக்கே...

மக்கள் மத்தியில் கூட்டமைப்பில் உள்ள சிலர் மீதும், அவர்களுடைய கருத்துக்கள் மீதும் விமர்சனங்கள் இருக்கின்றன. ஆனாலும் தாம் நீண்ட காலம் ஆதரித்தமையாலும், கூட்டமைப்புக்கு நிகரான மாற்று இல்லாமையாலும் கூட்டமைப்புக்கே ஆதரவளிக்கவேண்டிய நிலையில் இருக்கிறோம். என்பதைப் பல இடங்களில் மக்கள் கூறினார்கள் எனவும் அவர் குறிப்பிட்டார்.

சமகால அரசியல் நிலைமைகள் குறித்து நேற்று யாழ்.ஊடக அமையத் தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வேட்புமனு தாக்கல் செய்யும் போதும் கூட நாடாளுமன்றத் தேர்தல் போட்டி மிக்கதாக இருக்கும் என நினைத்தேன். ஆனால் மக்களுடன் பேசத் தொடங்கியதன் பின்னர் அவ்வா றான போட்டி எதுவும் இல்லை என்பதை என்னால் உணர்ந்துகொள்ளக் கூடியதாக இருந்தது.

கூட்டமைப்புக்கு நிகரான மாற்று ஒன்று இல்லாமை, நீண்டகாலம் கூட்டமைப்பை ஆதரித்தமை போன்ற காரணங்களால் கூட்டமைப்புக்கே தாங்கள் வாக்களிக்கும் நிர்ப்பந்தம் உள்ளதாகவும் பல இடங்களில் மக்கள் சொன்னார்கள்.

ஆகவே வடக்கு-கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே அதிகூடிய ஆசனங்களைப் பெற்றுக் கொள்ளும். இதர கட்சிகள் எதாவது ஒரு தேர்தல் மாவட்டத்தில் ஓர் ஆசனம் பெறலாம் -என்றார்.

கூட்டமைப்பு கடந்த முறை கூறியதையே இப்போதும் கூறுகிறது, ஆனால் ஒன்றும் நடக்கவில்லை என மக்கள் குற்றஞ்சாட்டுவது தொடர்பாக ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அவர்-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடந்த முறை ஒன்றையும் புதிதாகக் கூற வில்லை. 70 வருடங்களாக தந்தை செல்வநாயகம், அமிர்தலிங்கம், விடுத லைப் போராட்ட இயக்கங்கள், தமிழீழ விடுதலைப் புலிகள் கூறியதையே கூட்டமைப்பு இப்போதும் கூறுகிறது.

2015ஆம் ஆண்டுக்கு முன்னர் கிட்டத்தட்ட 600 அரசியல் கைதிகள் இருந்தார்கள். இன்று 100 அரசியல் கைதிகள் இருக்கிறார்கள்.

அவர்கள் எந்தவகையில் விடுவிக்கப் பட்டிருந்தாலும் அது வெளியில் தெரியாவிட்டாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே இவற்றுக்கு மூல காரணம். வலிகாமம் வடக்கில் 4 ஆயிரம் ஏக்கர் நிலம் விடுவிக்கப் பட்டுள்ளது. அதற்குக் காரணம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வழங்கிய இடையறாத அழுத்தம்.

மேலும் 2017ஆம், 2018ஆம் ஆண்டு களில் 700 கோடி ரூபாய் நிதி யாழ். மாவட்டத்திற்கு கொடுக்கப்பட் டுள்ளது.

கிராம எழுச்சி திட்டத்தின் கீழ் கிராமங்களில் பல வீதிகள் புனரமைப்பு செய்யப்பட்டிருக்கின்றன. இதற்கும் காரணம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. அரசியல் தீர்வு விடயத்தில் கூட செவ்வனே ஒரு முயற்சி நடந்தது.

நாங்கள் அங்கம் வகித்த குழுவில் என்னால் வழங்கப்பட்ட அறிக்கையை வாசித்தவர்கள் நான் ஒரு பயங்கரவாதி என்றார்கள்.

அந்தளவுக்கு ஆக்கபூர்வமான விடயத்தை கொடுத்தேன். மேலும் நான் அரசமைப்பு பேரவையில் உப குழு ஒன்றில் இருந்தபோதே சொன் னேன். இது முடிவுக்கு வரப்போவதில்லை என, அதற்குக் காரணம் சிங்களத் தலைவர்கள் இதுவரை நியாயமான தீர்வை நோக்கி நகர்வதற்கு தயாராக இல்லை. ஆகவே நாம் தொடர்ந்து நகர்வதற்கு கூட்டமைப்பை மக்கள் தெரிவு செய்யவேண்டும்-என்றார்.

## வாக்குறுதியில்...

குற்றம்சாட்டியுள்ளது.

புதிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் அவரது இடைக்கால அரசும், பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவதில்லை என்ற கொள்கைத் தீர்மானத்தை எடுத்திருப்பதாகவும், ஐரோப்பிய ஒன்றியத்தின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## ஹூலை....

பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள் ளார்.

பொதுஜன பெரமுனவின் அலுவ லகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்துக்கொண்டு கருத்து தெரிவித்த அவர், தேர்தலை கண்காணிக்க வெளிநாட்டு கண்காணிப்பு அமைப்புக்கள் கட்டாயம் அனுமதிக்கப்பட வேண்டும் எனக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாடாளுமன்ற தேர்தலைக் கண்காணிக்க சர்வதேச கண்காணிப்பு அமைப்புக்களைத் தேர்தல் ஆணைக்குழு அனுமதிக்கவேண்டும்.

கண்காணிப்பு அமைப்புக்கள் தொடர்பான நடவடிக்கைளை தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர் ரட்னஜீவன் ஹூல் தலைமையில் முன்னெடுப்பதற்கு அனுமதி வழங்கக் கூடாது.

இரட்டைக் குடியுரிமையைக் கொண்ட ரட்ணஜீவன் ஹூல் எவ்வாறு சுயாதீனமான முறையில் செயற்படுவார் என்ற சந்தேகம் காணப்படுகிறது.

இதேவேளை விருப்பு வாக்கு முறைமைக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு உண்டு. 2014 ஆம் ஆண்டு அரசால் தற்போதைய வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன தலைமையில் தேர்தல் முறைமை சீர்திருத்தம் தொடர்பில் குழு நியமிக்கப்பட்டது.

இக்குழுவின் அறிக்கையில் பரிந்துரை செய்யப்பட்டுள்ள விடயங்கள் விருப்பு வாக்கு முறைமையினை இரத்துச் செய்ய வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆகவே புதிய அரசால் தேர்தல் முறைமை தொடர்பாக இந்த குழு சமர்ப்பித்த அறிக்கை முழுமையாக செயற்படுத்தப்படும்-என்றார்.

## மரணச் சடங்கில்...

வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது. குறித்த வாய்த்தர்க்கம் முற்றிய நிலையில் வாள் வெட்டுச் சம்பவமாக மாறியுள்ளது. இந்த வாள்வெட்டுச் சம்பவத்தில் இருவர் படுகாயமடைந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் ஒருவர் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

## கருணா....

தொடர்பில் தென்னிலங்கை அரசியல் தரப்பில் கடுமையான எதிர்ப்புகள் வெளியிடப்பட்டு வருகிறது.

இதையடுத்து உடனடி விசாரணையை ஆரம்பிக்குமாறு உத்தரவிடப்பட்டிருந்த நிலையில் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு முன்னிலையாகுமாறு கருணாவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இதனடிப்படையில் விசாரணையில் முன்னிலையாவதற்காக அம்பாறையில் இருந்து நேற்று கொழும்பு சென்றிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இன்று அவர் குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலையாகி வாக்குமூலம் வழங்க உள்ளார் எனவும் தெரியவருகிறது.

### கருணாவின் கருத்து:

# கோட்டா, மஹிந்தவின் நிலைப்பாடுதான் என்ன ?

### மனோ கணேசன் கேள்வி



கொழும்பு, ஜூன் 23

கருணாவின் அண்மைய பிரசாரம் தொடர்பாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் அவர்களது கருத்தை தெரியப்படுத்த வேண்டும் என மனோ கணேசன் வலியுறுத்தியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்த அவர், அனைத்து மக்களும் நாட்டில் ஐக்கியத்துடன் வாழும் ஒரு சூழலில் ஆனையிறவில் 2000 - 3000 வரையான இராணுவத்தினரை தானே கொலைச் செய்ததாக கருணா அம்மான் கூறியிருப்பது பொறுப்பற்ற கருத்தாகும் என கூறியுள்ளார்.

தற்போது நாட்டில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள கருத்துகளை தெரிவித்தவர்களான கருணா அம்மான், மஹிந்தானந்த அளுத்கமகே மற்றும் ஈஸ்டர் ஞாயிறு தினத் தாக்குதல்கள் தொடர்பாக பொறுப்புக் கூறவேண்டிய பிரதான நபராக கருதப்படும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகியோர் ஆளும் தரப்பினருடனே இணைந்துக் கொண்டுள்ளனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும் இவர்களுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பாக எந்தவித கருத்துகளையும் தெரிவிக்காது அரசாங்கம் அமைதிகாத்து வருகின்றமை பெரும் வியப்பை ஏற்படுத்தியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இரண்டு நாட்களின் பின் இருவருக்கு கொரோனா!

கொழும்பு, ஜூன் 23

இலங்கையில் இரண்டு நாட்களின் பின்னர் நேற்று இருவர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

தேசிய தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவினால் நேற்றிரவு 11 மணிக்கு எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி, கொரோனா வைரஸ் தொற்றியுள்ளதாக அடையாளம் காணப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 1,952 ஆகக் காணப்படுகின்றது.

குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 1,526 ஆக உயர்வடைந்துள்ளது.

கொரோனாவால் இதுவரை பாதிக்கப்பட்ட 1,952 பேரில் தற்போது 415 நோயாளிகள் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## ஐ.தே.க...

உத்தரவு பிறப்பிக்கக் கோரி, ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனுவை விசாரித்த கொழும்பு மாவட்ட நீதிமன்ற நீதிவான், அமலி ரணவீன, மனுவைத் தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளார்.

## கருணாவின்...

சந்திப்பொன்றில் கலந்துகொண்டு மேலும் கருத்துரைத்த அவர்,

கருணா அம்மான் பாரதூரமான உரையொன்றை நிகழ்த்தியுள்ளார். மொட்டுக் கட்சியின் பிரதான பொறுப்பை வகிப்பவர் என்ற வகையில் இந்த உரை தொடர்பில், நாட்டு மக்கள் அவதானம் செலுத்த வேண்டும். இராணுவத்தை கொன்றவர் மொட்டுக் கட்சியில் அங்கம் வகிப்பதும் பாரதூ ரமானதெது. இது குறித்து ஐக்கிய தேசியக் கட்சியின் அதிருப்தியை வெளியிடுகிறது.

மேலும், அரசு இதற்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். கருணாவை கட்சியிலிருந்து நீக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்-என்றார்.

## கைத்துப்பாக்கி...

காட்டி மிரட்டினார்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, தம்மைப்போல் வேறு சிலரும் படையினரால் அச்சுறுத்தப்பட்டார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## உடனடி....

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, படையினர் மற்றும் பொலிஸார் ஆலயத்துக்குள் நடந்துகொண்ட முறை குறித்து முறைப்பாடு செய்தார் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

இதையடுத்து, வடபிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபரை நேற்றுக் காலை தொடர்பு கொண்ட பிரதமர் மஹிந்த, உடனடியாக விசாரணை நடத்துமாறு உத்தரவிட்டுள்ளார் என்றும், இவ்வாறான சம்பவங்கள் இனிமேல் இடம்பெறாமல் இருப்பதை உறுதிப்படுத்துமாறும் அவர் பிரதி பொலிஸ்மா அதிபருக்குப் பணித்துள்ளார் என்றும் கூறப்படுகிறது.

இதையடுத்து, நயினாதீவுப் பகுதிக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், சம்பந்தப்பட்ட கடற்படையினரை மற்றும் பொலிஸ் அதிகாரிகளை அழைத்து, விசாரணை நடத்தியுள்ளார் எனப் பொலிஸ் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஈழநாடு
Eelanadu
23.06.2020 செவ்வாய்க்கிழமை

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

gmail:- eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 492 7805

## இந்து வாக்குகளும் கத்தோலிக்க வாக்குகளும்?

கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை, கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது அரசியல் செய்ததாக, முன்னாள் அமைச்சர் ஹறீன் பெனாண்டோ தெரிவித்திருக்கின்றார். 5 வீதமான கத்தோலிக்க வாக்குகளை அவர் திசைதிருப்பினார். இதன் காரணமாகவே கோட்டாபயவினால் வெற்றி பெற முழந்ததென்றும் ஹறீன் தெரிவித்திருக்கின்றார். இது சரியான கூற்றுத் தானா என்பதை ஒரு புறமாக வைத்துவிட்டு, தமிழ்ச் சூழலை பார்ப்போம்.

தமிழ் வாக்குகளை கத்தோலிக்க வாக்குகள் - இந்து வாக்குகள் என்று பிரித்துப் பார்க்கும் ஒருபோக்கு தமிழ்ச் சூழலில் முன்னர் எப்போதுமே இருந்த தில்லை. தமிழ் வாக்குகள் என்னும் பொதுப் பார்வையே இருந்தது. ஆனால் அண்மைக்காலமாக வாக்குகளை மதரீதியில் அடையாளப்படுத்தும் ஒரு புதிய போக்கு தலையைதூக்கியிருக்கின்றது. கத்தோலிக்கர்கள் கத்தோலிக்கர் களைத்தான், ஆதரிக்க வேண்டும் - இந்துக்கள் இந்து வேட்பாளர்களை ஆதரிக்க வேண்டுமென்னும் பிரச்சாரமொன்று விரீயம் பெற்றுவருகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிடும் ஒரு வேட்பாளர், யாழ். மாவட்டத்தில், நான் மட்டும்தான் ஒரேயொரு கத்தோலிக்க வேட்பாளரென்று பிரச்சாரம் செய்யுமளவிற்கு நிலைமைகள் மாறியிருக்கின்றன. அதே போன்று, மன்னார் மாவட்டத்தில் வாழும் இந்துக்கள், கத்தோலிக்க வேட் பாளர்களுக்கு வாக்களிக்க வேண்டாமென்று கூறும் பிரச்சாரங்களையும் காண முடிகின்றது.

குறிப்பாக சுமந்திரன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் தவிர்க்க முடியாத ஒரு நபராக எழுச்சியுற்றபின்னர்தான், தமிழ்ச் சூழலில் இவ்வாறானதொரு நிலைமை வெளித்தெரியத் தொடங்கியது. மதப் பிளவுகள் உள்நுழைந்தன. இதன் பின்னனி என்னவென்பது இன்னும் சரியாக விளங்கவில்லை. சுமந்திரன் அடிப்படையில் ஒரு கத்தோலிக்கர் அல்லர். உண்மையில் அவர் மெதடிஸ் கிறிஸ்தவர்.

இலங்கை தமிழரசு கட்சியை உருவாக்கிய எஸ்.ஜே.வி.செல்வநாயகம் ஒரு கத்தோலிக்கர். ஆனால் அரசியலில் அவரை எவருமே மதரீதியில் பார்க்க வில்லை. அவரது தலைமையை அனைவருமே ஏற்றுக் கொண்டிருந்தனர். தமிழ் மக்கள் மத்தியில் தந்தை என்று அழைக்கப்படக் கூடிய உயர்ந்த இடத் தில் அவர் வைக்கப்பட்டிருக்கிறார். அதற்கு அவரிடமிருந்த தூர நோக்கும், தமிழ்த் தேசியத்தின் மீது அவர் காண்பித்த நேர்மையும், உறுதியுமே காரண மாகும். ஆனால் தற்போதிருப்பவர்களிடம் அவ்வாறான நேர்மையையும் உறுதியையும் காண முடியவில்லை. இதன் காரணமாகவே மதரீதியான விவாதங்கள் இடம்பெறுகின்றன - பிளவுகள் அதிகரிக்கின்றன.

இந்தப் போக்கு மன்னாரிலேயே மிக மோசமான நிலையை எட்டி யிருக்கின்றது. கத்தோலிக்க மக்கள் பெரும்பான்மையாக வாழும் மன் னாரில், ஆயரின் ஆசீர்வாதமில்லாமல் ஒருவர் நாடாளுமன்றம் செல்ல முடியாதென்னும் நிலைமை காணப்படுகின்றது. கடந்த காலத்தில் ஆயர் இராயப்பு யோசப் இதில் அதிக செல்வாக்குச் செலுத்தக் கூடிய ஒருவராக இருந்தார். ஆனால் அவ்வாறான சூழலில் கூட, கத்தோலிக்க வாக்குகள் என்று பிரித்துக் கூறுமளவிற்கு நிலைமைகள் மோசமடையவில்லை. ஆனால் இன்று நிலைமை மோசமடைந்திருக்கின்றது. இதற்கு திருக் கேதீஸ்வர வளைவு பிரச்னையில் சுமந்திரன் தேவையில்லாமல் தலையீடு செய்தமையும் ஒரு முக்கிய காரணமாகும்.

உண்மையில் திருக்கேதீஸ்வர பிரச்னை ஒரு மொழிபேசும் தமி ழர்களின் சமூகப் பிரச்சினையாகும். அதில் கூட்டமைப்பு தலையீடு செய்திருக்கக் கூடாது. சுமந்திரன் தன்னை ஒரு மேலான தலைவராக காண்பிப்பதற்காக இந்துக்களுக்கு ஆதரவாக வாதாடியிருந்தார். இதனால் கத்தோலிக்கர்கள் கூட்டமைப்பின் மீது கோபமுற்றனர். கத்தோலிக்க வாக்குகளை நம்பியிருக்கும் ரெலோவின் தலைவரும், மன்னார் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவருமான, செல்வம் அடைக்கலநாதன் தனது கத்தோலிக்க வாக்குகளை பாதுகாப்பதற்கான, இந்துக்களின் நியா யத்தை கண்டுகொள்ளவில்லை. உண்மையில் ஒரு மக்கள் பிரதிநிதியான செல்வம் அடைக்கலநாதன், மன்னார் இந்துக் மக்களிடம், மன்னிப்புக் கோரி யிருக்க வேண்டும். ஆனால் அடைக்கலநாதன் அதனைச் செய்யவில்லை. இந்துக்களின் வாக்குகள் தனக்குத் தேவையில்லை என்றவாறே நடந்து கொண்டார். தனது தொகுதி மக்களின் ஒரு பகுதியினரின் சமய உணர்வை அவர் மதித்துநடக்கவில்லை. இதனால் இரு சமூகங்களுக்குமிடையில் அரசியல் ரீதியில் பிளவுகள் ஏற்பட்டன. இந்த பிளவுகளின் விளைவாகவே, மன்னார் இந்துக்கள், இந்து வேட்பாளர்களுக்கு வாக்களிக்க வேண்டு மென்னும்பிரச்சாரங்கள் முளைத்திருக்கின்றன. இது முளையிலேயே கிள்ளி யெறிப்படாதுவிட்டால், எதிர்காலத்தில் நிலைமைகள் மேலும் மோசம டையலாம். இது தமிழ்த் தேசிய அரசியலுக்குள் ஒரு புதிய பிரச்சினையை தோற்றுவிக்கலாம்.

# நெருக்கடியை எதிர்கொள்ள ஒன்றிணைவோம்

## தமிழ் மக்கள் பேரவை அழைப்பு

உலக வல்லரசுகளின் ஒழுங்கமைப்பையே மாற்றி அமைக்கப் போகும் கொவிட்-19 எனப்படும் கொரோனா வைரஸ் தாக்கத் தின் விளைவுகள் இன்னும் பல ஆண்டுகள் நீடிக்கப் போவதற்கான சாத்தியக் கூறுகள் தெளிவாகத் தெரி கின்றன. இந்த நிலையில் எமது பிரதேச பொருளா தாரமும் ஒரு பாரிய நெருக் கடியை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் இருக்கும் எமது பொருளாதாரத்தை தக்கவைத்து மேம்படுத்தும் திட்டமிடல்களை செய்யத் தவறின் வறுமையும் பட்டினி யும் எமைச் சூழும் அபாயம் இருக்கிறது இது எமது கல்வி, சுகாதார, அரசியல் ஸ்திரத்தன்மையிலும் பாரிய பின்னடைவை ஏற்படுத்தும் சாத்தியம் இருக்கிறது.

எமது பிரதேசத்தின் பொருளாதாரத் திட்டமி டல் சம்பந்தமான கலந்துரை யாடல்கள் ஏற்கனவே ஆரம்பமாகி இருக்கின்றன. பல துறைசார் வல்லுநர் களும் இது சம்பந்தமான கருத்துக்களை தெரிவித்து வருகின்றனர். நிலம் மக்களின் வாழ்வாதாரத்தை யும் பொருளாதாரத்தையும் தக்கவைக்கும் ஒரு முக்கிய உற்பத்தி சாதனமாக அமைகின்றது.

இலங்கையின் முழு நிலப்பரப்பு 6.56 மில்லியன் ஹெக்ரெயர்கள் ஆகும். இதில் 82% சதவீதமான நிலங்கள் அரசுடைமை நிலங்களாகும் இந்த அரச நிலத்தில் 37% சதவீதமா னவை மட்டுப்படுத்தப்பட்ட உரிமை ஆவணங்களினூ டாக சிறு விவசாயிகளுக்கும் கிராம விஸ்தரிப்பு நடவடிக் கைகளுக்கும் குடியேற்றத் திட்டங்களுக்கும் பங்கிட்டு கொடுக்கப்பட்டுள்ளத. இவ்வாறு சிறுவிவசாயி களுக்கு பங்கிட்டு கொடுக்கப்பட்டிருக்கும் அரச காணிகளின் அளவு வடக்கு, கிழக்கு பகுதிகளில் ஒப்பீட்டளவில் மிகவும் குறைவாகவே காணப்படுகிறது. அத்துடன் இப்பகுதிகளில் இராணுவம் பொதுமக்களின் நிலங்களை சுவீகரித்திருப்பதும் நிலமற்றோர் பலர் இருந் தும் இப்பகுதி மக்களிற்கான குடியேற்றத் திட்டங்கள் போதுமான அளவு நடை முறைப்படுத்தப்படாமல் இருப்பதும் கவலை தருவ தாக அமைவதுடன் பொருளாதார மேம்பாட் டிற்கும் தடைக்கல்லாய் அமைகிறது.

இந்தப்பகுதிகளில் சில காணிகளை பௌத்த புனித பிரதேசங்களாக பிரகடனப்படுத்தியும் வன இலாகாவிற்கு சொந்தமா னது என வகைப்படுத்தியும் மகாவலி திட்டத்திற்கு உரியது என வரையறுத்தும் இருப்பதால் இந்தக் காணி களை மக்கள் வாழ்வாதாரத் திற்குற்கும் பொருளாதார அபிவிருத்திக்கும் பயன் படுத்த முடியாத நிலை காணப்படுகிறது.

தொடர்ந்து நீடிக்க இருக்கும் அசாதாரண சூழ்நிலை காரணமாக ஏற்பட்டிருக்கும் வேலை இழப்பு, வருவாய்க் குறைவு, புலம்பெயர் தேசங்களிலி ருந்து கிடைத்து வந்த வருவாயில் ஏற்படப்போகும் தாக்கங்கள், செலவின அதிகரிப்பு போன்றவை தற்பொழுது எம்முன்னே திடீரென்று எழுந்திருக்கும் சவால்கள் எனக் கொள்ளமுடியும்.

இவ்வாறான புறச் சூழ் நிலைகளை கருத்திற் கொண்டு தேர்தல் அரசியல் வேறுபாடுகளைக் கடந்து பொது நோக்கத்திற்காக ஒன்றுபட்ட திட்டமிடுதல் களில் ஒன்றுபடுவது காலத்தின் தேவையாக அமைகிறது. எழுந்துவரும் பொருளாதார நெருக்கடிகளை எதிர் கொள்ளும் குறுகியகால உபாயங்களாக ஆடம்பரச் செலவுகளைக் குறைத்தல் குடிவகைப் பாவனை, புகைத்தல் என்பவற்றை நிறுத்துதல் உள்ளூர் உற்பத்தி முயற்சிகளையும் அதன் பாவனையையும் மேம்படுத்த தனிநபர்களோ, குழுக்களோ, பொருளாதார அபிவிருத்தி முயற்சிகளை ஆரம்பிக்கும் போது நன்கு திட்டமிடுதலும் துறைசார் வல்லுநர்களின் ஆலோசனைகளைப் பெறுதலும் பயன்படுத்தப் படாதிருக்கும் நிலங் களில் உற்பத்தி முயற்சி களை ஆரம்பித்தல் போன்ற வற்றைக் குறிப்பிடலாம்.

இதற்கான நீண்டகாலத் திட்டமிடல் பற்றி சிந்திக்கும் பொழுது எம்மைச் சூழவுள்ள வளங்கள் சரியான முறையில் பயன்படுத்தப்படவில்லை என்பது தெளிவாகத் தென்படுகிறது. அதனை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் முனைப்புப் பெறவேண்டிய தேவை எழுந்திருக்கிறது.

எமது கல்விமுறை உள்ளூர் வளங்களை அடிப்படையாகக் கொண்ட எமது தேவைகளை பாரம் பரியங்களை கொண்ட ஒரு கல்வி முறையாக அமையவில்லை. இவற்றை அடிப்படையாகக் கொண்ட தொழிற்பயிற்சியும் கல்வி யும் ஒருங்கிணைந்த ஒரு கல்விமுறை அறிமுகப் படுத்தப்பட வேண்டிய தேவையை பல துறைசார் வல்லுநர்கள் வலியுறுத்தி இருக்கிறார்கள். பாட சாலைக் கல்வியும் பல் கலைக்கழக கல்வியும் தொழிற்பயிற்சி மையங்களு டன் இணைந்ததான ஒரு கல்வித் திட்டத்தை கொண்டதாக அமைய வேண்டும் என்று பலர் அபிப்பிராயம் தெரிவிக் கின்றனர்.

எந்தத் தொழில் செய்ப வரும் அதிலே பயிற்சி பெற்றவராக இருப்பது அவசியமாகிறது. இதுவே தரமான சேவையையும் உற்பத்தியையும் உறுதி செய்து சந்தைப் போட்டி களை வெற்றி கொண்டு ஸ்திரமான பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையாக அமையும் விவசாய கால் நடை மீன்பிடி சம்பந்தமான அறிவியல் தொழிற்பயிற்சி கற்கை நெறிகள் மேம் படுத்தப்படவேண்டிய தேவை இருக்கிறது.

எமது கல்விமுறை எமது தேவைகள் வளங்கள் நோக்கியதாக அமையாததாலும் உள்ளூர் உற்பத்திக்கான பாரிய முதலீடுகள் ஏதும் ஏற்படுத்தப்படாத காரணத்தாலும் உள்ளூர் தொழில் வாய்ப்புக்கள் குறைந்து போக பலர் வெளிநாடு நோக்கி இடம்பெயர வேண்டிய ஒரு துர்ப்பாக்கிய நிலை காணப்படுகிறது.

1987இல் இலங்கை யாப்பில் ஏற்படுத்தப்பட்ட 13 ஆம் திருத்தத்திற்கு பின்பும் இன்றுவரை மத்திய அரசே அரச காணிகளின் கட்டுப்பாட்டில் மேலாதிக்கம் கொண்டுள்ள நிலை காணப்படுகிறது. அத்துடன் கல்விச் சீர்திருத்த நடவடிக்கைகளில் கூட மத்திய அரசின் கட்டுப்பாடுகள் மேலோங்கி காணப்படுகின்றன. இத்தகைய புறச்சூழலில் நாம் எமது பொருளாதார ஸ்திரத்தன்மையை பேணுவதற்கு கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள் சம்பந்தமான தொடர்ச்சியான கருத்துப் பரிமாற்றங்கள் பயனுடையதாக அமையும்.

முயற்சியாளர்களுக்கு தேவையான நில ஒதுக்கீடு, அவர்களுக்கான பயிற்சியும் வழிகாட்டலும், பொருளாதார உள்கட்டுமானங்களை மேம்படுத்துதல் சிறிய தொழில் முயற்சிகளை ஊக்கப்படுத்தல், சந்தைப்படுத்தல் போன்ற பல்வேறு விடயங்கள் சம்பந்தமான உங்கள் கருத்துக்களை தமிழ்மக்கள் பேரவை எதிர்பார்த்து நிற்கிறது உங்கள் அபிப்பிராயங்களை (tpcmediasl@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி உதவுமாறு உங்களை அன்புடன் கேட்டு நிற்பதோடு நாம் தேர்தல் அரசியல் கடந்து எமது இலக்கினை நோக்கி ஒன்றிணைந்து பயணிக்க அனைவரையும் அழைத்து நிற்கின்றோம்.

செய்திகள்



## உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலுக்கு முன்னரே இலங்கையை எச்சரித்தாராம் பாக். தூதுவர்

கொழும்பு, ஜூன் 23

இஸ்லாமிய தீவிரவாதிகளின் சந்தேகத்துக்கு இடமான நடவடிக்கைகள் குறித்து பாகிஸ்தான் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு முன்னர் இலங்கை அரசை எச்சரித்திருந்தது எனப் பாகிஸ்தான் தூதுவர் மேஜர் ஜெனரல் முகமட் சாட் ஹட்டாக் தெரிவித்துள்ளார்

ஐ.எஸ்.போன்ற அமைப்புகளின் நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் பாகிஸ்தானின் புலனாய்வு அமைப்புகள் இலங்கை தொடர்பிலான நடவடிக்கைகளை அவதானித்த பின்னர் இலங்கை அதிகாரிகளுக்கு அது குறித்து உரிய நேரத்தில் தெரிவித்திருந்தனர்.

எனினும் இலங்கை தரப்பிலிருந்து எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எந்தத் தகவலையும் பயனற்றது எனக் கருதமுடியாது என தெரிவித்துள்ள மேஜர் ஜெனரல் முகமட் சாட் ஹட்டாக், அவ்வாறான தகவல்களை அலட்சியம் செய்வதால் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் போன்றவை இடம்பெறலாம் எனவும் கூறினார்.

## செஞ்சிலுவைச் சங்க மன்னார் கிளைச் செயலாளர் உயிரிழப்பு

மன்னார், ஜூன் 23

மன்னார், பெரியகட்டு 41 ஆவது மைல் கல்லுக்கு அருகில் உள்ள ரயில் வீதியில் ரயில் முன் பாய்ந்து மன்னாரைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் உயிர் மாய்த்துள்ளார்.

கொழும்பில் இருந்து மன்னார் நோக்கிப் பயணித்த ரயிலுக்கு முன் பாய்ந்தே அவர் உயிர் மாய்த்தார்.

இவ்வாறு தற்கொலை செய்தவர் சமூக சேவையாளரும், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மன்னார் கிளையின் செயலாளராக கடமையாற்றிய இரண்டு பிள்ளைகளின் தந்தையான ஆ.ரகு சங்கர் (வயது-43) எனத் தெரிய வந்துள்ளது.

நேற்று திங்கட்கிழமை காலை பெரியகட்டு ரயில் வீதிக்கு அருகில் தனது வாகனத்தை நிறுத்திவிட்டு மன்னார் நோக்கிப் பயணித்த ரயில் முன் அவர் பாய்ந்துள்ளார் எனக் கூறப்படுகின்றது.

சடலம் மடு ரயில் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை பறையநாளன்குளம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

## சாரதி அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடிக் காலம் நீடிப்பு

கொழும்பு, ஜூன் 23

2020 ஜூலை முதலாம் திகதிவரையான காலத்தில் காலவதியாகும் சாரதி அனுமதிப்பத்திரங்களின் செல்லுபடியாகும் கால எல்லை செப்ரெம்பர் 30 ஆம் திகதிவரை நீடிக்கப்படும் என்று போக்குவரத்து அமைச்சு அறிவித்துள்ளது.

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று பரவலைக் கட்டுப்படும் நடவடிக்கைகள் காரணமாகக் கொண்டுவரப்பட்ட கட்டுப்பாடுகளால்

சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கல், சாரதி அனுமதிப்பத்திரத்துக்கான எழுத்து மற்றும் செயல்முறைப் பரீட்சைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

இந்த நிலையில் மார்ச் 16 ஆம் திகதி தொடக்கம் ஏப்ரல் 15 ஆம் திகதிவரையான காலத்தில் காலவதியாகும் சாரதி அனுமதிப்பத்திரங்களின் கால எல்லை செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதி வரை 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும் காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், 2020 ஜூலை முதலாம் திகதிவரையான காலத்தில் காலவதியாகும் சாரதி அனுமதிப்பத்திரங்களின் செல்லுபடியாகும் கால எல்லை செப்ரெம்பர் 30 ஆம் திகதிவரையான 3 மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது என்று போக்குவரத்து முகாமைத்துவ அமைச்சு அறிவித்துள்ளது.

## மிதிவெடி அகற்றும் நிறுவனத்துக்குள் சி-4 வெடிமருந்தை கைப்பற்ற முயற்சி

### காவலாளி கண்டதால் தப்பியோட்டம்
### இருவரைத் தேடும் நடவடிக்கையில் இராணுவம்

யாழ்ப்பாணம், ஜூன் 23

பளை பகுதியில் இரண்டரை கிலோ எடையுள்ள சி-4 வெடிமருந்து இராணுவத்தினரால் நேற்று அதிகாலை மீட்கப்பட்டுள்ளது.

பளைப் பகுதியிலுள்ள மிதிவெடி அகற்றும் நிறுவனத்துக்குள் புகுந்த இரண்டு சந்தேக நபர்கள், அங்கு இருந்த வெடிமருந்துகளை திருடிக் கொண்டு வெளியில் வந்த போது நிறுவனத்தின் காவலாளி கண்டதால், வெடிமருந்து மூட்டையைப் போட்டு விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாகப் பளை பொலிஸாருக்கும் இராணுவத்துக்கும் தகவல் வழங்கப்பட்டது.



அதனைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்கு வந்த இராணுவத்தினர் சோதனையிட்டனர். அப்போது அந்த மூட்டைக்குள் இருந்து இரண்டரை கிலோ சி-4 வெடிமருந்து மீட்கப்பட்டுள்ளது.

இரு சந்தேக நபர்களையும் தேடும் நடவடிக்கையில் இராணுவம் மற்றும் பொலிஸார் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றனர்.

## எளிமையான முறையில் புதூர் நாகதம்பிரானுக்குப் பொங்கல்

வவுனியா, ஜூன் 23

வரலாற்று சிறப்புமிக்க வவுனியா புளியங்குளம் புதூர் நாகதம்பிரான் ஆலய பொங்கல் விழா அனுமதிக்கப்பட்ட பக்கதர்களின் பங்களிப்புடன், சுகாதார நடைமுறைகளைப் பேணி எளிமையான முறையில் நேற்று இடம்பெற்றது.

கொவிட் 19 வைரஸ் தாக்கத்தைக் கருத்தில் கொண்டு ஆலயத்தின் பொங்கல் விழாவில் கலந்துகொள்வதற்கு ஆலய நிர்வாகத்தினரால் சிபார்சு செய்யப்படும் 80 பேருக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்படும் என ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன், ஏனைய பக்கதர்கள் திருப்பி அனுப்பப்படுவர் என்று மாவட்ட அரச அதிபர் ஏற்கனவே தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் நேற்று பொங்கல் விழாவையொட்டி காலை முதலே அதிகளவான பக்கதர்கள் புதூர் ஆலயத்திற்குச் செல்வதற்காக வருகை தந்திருந்தனர். எனினும் ஏ-9 வீதி புதூர் சந்தியில் கடமையில் ஈடுபட்டுள்ள பொலிஸார் பொதுமக்களை ஆலயத்திற்குள் செல்ல விடாது திருப்பி அனுப்பினர்.





## புதூர் நாகதம்பிரானின் பொங்கலுக்கு சென்றோர் திருப்பி அனுப்பப்பட்டனர்

வவுனியா, ஜூன் 23

வவுனியா, புளியங்குளம் பகுதியில் அமைந்துள்ள புதூர் அருள்மிகு நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் விழாவுக்கு செல்பவர்கள் ஏ-9 பிரதான வீதி வாசலிலேயே வைத்துத் திருப்பி அனுப்பப்பட்டு வருகின்றனர் என அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான பக்தர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில் 80 பேர் மட்டுமே ஆலய திருவிழாவில் பங்கேற்க அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இவ்வாறு ஏற்கனவே ஆலயத்துக்குச் செல்ல அனுமதி வழங்கப்பட்டிருந்த 80 பேருக்கு மட்டுமே பொங்கல் உற்சவத்தில் பங்கேற்க அனுமதிக்கப்படுவார்கள் என்றும் ஏனையவர்கள் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் வவுனியா வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் திருமதி அனோஜன் ரட்ஷாயினி நேற்று முன் தினம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

வரலாற்றுப் புகழ் பெற்ற புதூர் நாகதம்பிரான் ஆலய வருடாந்த திருவிழாவுக்கு வடக்கு மாகாணத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் ஏராளமான பக்தர்கள் செல்வது வழக்கமாகும்.

அந்த வகையில் நேற்றும் பல நூற்றுக்கணக்கான பக்தர்கள் ஆலயத்தை நோக்கிப் பொங்கல் விழாவை முன்னிட்டுச் சென்றபோது வழிமறிக்கப்பட்டுத் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டனர் என அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

விளையாட்டுச் செய்திகள்



# ரோஹித் எனது முன்னுதாரணம் மனம் திறந்த பாகிஸ்தான் வீரர்

லண்டன், ஜூன் 23

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் புதிய துடுப்பாட்ட நட்சத்திரமாக கருதப்படுபவர் ஹைதர் அலி. 19 வயதான இவர் இங்கிலாந்து செல்லும் 29 பேர் கொண்ட பாகிஸ்தான் அணியில் இடம்பெற்றுள்ளார். இந்த நிலையில்,“ இந்திய வீரர் ரோஹித் சர்மாவே எனது முன்னுதாரணம். அவர் போன்று அதிரடியாக விளையாட நான் விரும்புகிறேன்”, என்று அவர் கூறியுள்ளார்.

மேலும், ரோஹித் சர்மாவின் ஆக்ரோஷ மான ஆட்டம் என்னை வெகுவாகக் கவர்ந்து இழுத்துள்ளது. அவர் எனது முன்மாதிரி ஆவார். ஏனென்றால் அவர் இந்திய அணிக்காக மிகவும் அற்புதமாக விளையாடுகிறார்.

டெஸ்ட், ஒருநாள் போட்டி மற்றும் ருவென்ரி - 02 என அனைத்து வகையான போட்டிகளிலும் அவர் விளாசி தள்ளுகிறார். அவரைப் போன்று நானும் பாகிஸ்தான் அணிக்காக சிறந்த தொடக்கத்தை கொடுக்க வேண்டும் என்று விரும்புகிறேன்.

அவர் 50 ஓட்டங்களைத் தாண்டி விட்டால் 100 மற்றும் 150 என்று அதிவேகத்தில் சென்று விடுகிறார் - என்றார்.

ஹைதர் அலி முதல் முறையாக சர்வதேச போட்டியில் ஆட இருக்கிறார். 19 வயதுக்குட்பட்ட அணியில் சிறப்பாக ஆடியதால் பாகிஸ்தான் அணி வீரர்களுக்கான ஒப்பந்தத்தில் அவருக்கு இடம் கிடைத்தது. இங்கிலாந்து சுற்றுப்பயணத்திற்கு தெரிவான் அவர் மீது எதிர்பார்ப்பு இருக்கிறது.

பாகிஸ்தான் அணி 3 டெஸ்ட் மற்றும் 3 ரி - 20 போட்டிகளில் விளையாடுவதற்காக இங்கிலாந்து செல்கிறது.

# டோனி இல்லையேல் கோலி இன்று இல்லை



புதுடில்லி, ஜூன் 23

2014 இங்கிலாந்து டெஸ்ட் தொடரில் கோலி கடுமையாக சொதப்பிய போது அணியை விட்டு நீக்கப்பட்டிருப்பார். ஆனால், டோனி அவரை ஆதரித்தார், டோனி இல்லையெனில் கோலியின் டெஸ்ட் வாழ்க்கை அந்தத் தொடருடன் முடிந்திருக்கும் என்று கௌதம் கம்பீர் தெரிவித்துள்ளார்.

10 இனிங்சில் 134 ஓட்டங்களையே கோலி அந்தத் தொடரில் எடுத்ததோடு, இங்கிலாந்து “ஸ்விங்“ பந்துவீச்சாளர் ஜேம்ஸ் அண்டர்சனின் செல்லப்பிள்ளையாகி அவரிடமே ஆட்டமிழந்து வந்தார். ஆனால் அதற்கு அடுத்த தொடரில் ஒரு முறை கூட கோலி அண்டர்சனிடம் விக்கெட்டைப் பறிகொடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஓரிருமுறை ஜேம்ஸ் அண்டர்சன் பந்தில் “பிளம்ப்“ ஆகி நடுவர் ஆட்டமிழப்புக் கொடுக்கவில்லை என்பது வேறு விடயம்.

“2014 தொடரில் நான் இருந்தேன். அந்தத் தொடரில் டோனிக்கு நாம் பாராட்டுத் தெரிவித்தே ஆக வேண்டும், ஏனெனில் நிறைய பேரின் கிரிக்கெட் வாழ்க்கை முடிவுக்கு வந்திருக்கும். குறிப்பாக டெஸ்ட் கிரிக்கெட்டில். டோனிதான் கோலியை மிகவும் ஆதரித்தார், இல்லையெனில் கோலியின் டெஸ்ட் வாழ்க்கை அந்தத் தொடரோடு முடிந்திருக்கும். ” என்றார்.

# ஓய்வை அறிவித்தார் அண்டர்ரேக்கர்



புளோரிடா, ஜூன் 23

கடந்த 30 வருடங்களாக டபிள்யூ. டபிள்யூ. ஈ. மல் யுத்தப் பொழுதுபோக்கு விளை யாட்டின் மிகப்பெரிய சகாப் தம் என்று கருதப்படும் அண் டர்ரேக்கர் தனது ஓய்வை அறிவித்துள்ளார்.

“அண்டர்ரேக்கர் தி பைனல் ரைட்“ என்கிற ஆவணப்படம் ஒளிபரப்பப்பட்டு வருகிறது. இது அண்டர்ரேக்கரின் வாழ்க்கையைப் பற்றிச் சொல் லும் ஆவணப்படம். இதன் கடைசிப் பகுதியில், தனக்கு மீண்டும் மல்யுத்த மேடையில் ஏறும் எண்ணம் இல்லை என்று அண்டர்ரேக்கர் குறிப்பிட்டுள்ளார்.

“என்றும் முடியாது என்று சொல்லக்கூடாது. ஆனால், என் வாழ்க்கையின் இந்தக் கட்டத்தில், மீண்டும் அந்த மேடையேறும் எண்ணம் எனக்கு இல்லை. பயணத்தை முடிக்கும் நிலையில் நான் இருக்கிறேன்.

நான் சாதிக்க எதுவும் இல்லை. வெற்றி பெறவும் எதுவுமில்லை. ஆட்டம் மாறிவிட்டது. புதியவர்கள் வருவதற்கான நேரம் இது. இதுதான் சரியான நேரமாகத் தோன்றுகிறது. இந்த ஆவணப்படம் அதைப் புரிந்துகொள்ள எனக்கு உதவி யிருக்கிறது. வாழ்க்கையின் பெரிய பாகத்தைப் பார்க்க என் கண்களை இது திறந்திருக் கிறது” என்று அண்டர்ரேக்கர் பேசியுள்ளார்.

மார்க் காலவ் என்பதே அண்டர்ரேக்கரின் இயற் பெயர். 1990 ஆம் ஆண்டு உலக மல்யுத்தப் பொழுது போக்கு விளையாட்டு என்று சொல்லப்படும் டபிள்யூ. டபிள்யூ. ஈ. இல் இவர் அறிமுகமானார்.

கடைசியாக இவர் ரெஸில் மேனியா 36 ஆம் பதிப்பில் விளையாடி னார். அதில் வெற்றி கண்டார். இதுவரை ரெஸில்மேனியா வில் சண்டையிட்ட 27 போட்டிகளில் 25 இல் அண்டர்ரேக்கர் வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது.



செய்திகள்

# 19 ஐ ஒழிக்கப் பலமான நாடாளுமன்றம் தேவை!



கொழும்பு, ஜூன் 23

19 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை ரத்துச் செய்வதற்கு, பலம்மிக்க நாடாளுமன்றத்தின் அதிகாரம் தேவை என்றும், அத்தகைய பலமான நாடாளுமன்றத்தை அமைக்க மக்கள் தமக்கு வாக்களிக்கவேண்டும் என்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

குருநாகல - வாரியபொல பகுதியில் நேற்று முன் தினம் மாலை இடம்பெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றிலேயே பிரதமர் மஹிந்த இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்-

இந்தத் தேர்தல் முடிவை நாடு முழுவதும் மாத்திரமன்றி உலகமே எதிர்பார்த்திருக்கிறது. எனவே இந்த வெற்றி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு முக்கியமானது.

நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு, ஜனாதிபதி பிரதிநித்துவப்படுத்தும் கட்சியே அரசை அமைக்கவேண்டும்.

தற்போதுள்ள 19 ஆவது அரசமைப்புத் திருத்தம் மாற்றப்படவேண்டியது அவசியம். என்னைப் பழிவாங்கும் நடவடிக்கையை முன்னெடுக்கவே 19 ஆவது அரசமைப்பு திருத்தம் கொண்டு வரப்பட்டது. அதனை தயாரித்தவர்களே இன்று அதை மாற்றுமாறு கூறுகின்றனர்.

ஆகவே பலமிக்கதொரு அரசை அமைப்பதற்கான உங்களின் பொறுப்பை நிறைவேற்றுங்கள் - என்றார்.



# இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கு பிரத்தியேக வாக்களிப்பு நிலையம்

## மஹிந்த தேசப்பிரிய தெரிவிப்பு

மன்னார், ஜூன் 23

மன்னார் மற்றும் முல்லைத் தீவு மாவட்டங்களில் இடம் பெயர்ந்து வாழும் மக்கள் வாக் களிக்கப் பிரத்தியேக வாக் களிப்பு நிலையம் ஒன்றை அமைக்கவுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

வடக்கில் தேர்தல் பணி களில் ஈடுப்படவுள்ள ஊழியர் களை தெளிவுபடுத்தும் சந்திப் பில் அவர் இதனைக் குறிப்பிட் டார்.

அத்தோடு வானொலிகள், தொலைக்காட்சிகள் மற்றும் பத்திரிகைகளில் பணம் கொடுத்து செய்யப்படும் விளம்பரங்களைத் தனக்கு தடுக்க அதிகாரம் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

எனவே வானொலிகள், தொலைக்காட்சிகள் போன்றவற்றில் ஒளி, ஒலிபரப்பாகும் செய்திகளில் வேட்பாளர்களுக்குச் சம அந்தஸ்த்து வழங்குமாறும் அவர் கேட்டுள்ளார்.



# வாகனத் திருத்துமிடத்தில் நின்ற மோட்டார் சைக்கிள்களுக்கு தீ!

வவுனியா, ஜூன் 23

வாகனத் திருத்துமிடத்தில் நிறுத்திவைக்கபட்டிருந்த மோட்டார் சைக்கிள்கள் தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளன.

வவுனியா கற்குளம் பகுதி யில் உள்ள வாகனத் திருத்து மிடம் ஒன்றில் நிறுத்திவைக்கப் பட்டிருந்த 6 மோட்டார் சைக்கிள்கள் இனந்தெரியாத விசமிகளால் நேற்று அதிகாலை எரியூட்டப்பட்டுள்ளன.

இந்த வாகனத் திருத்துமிடம் மூடப்பட்டிருந்த நிலையில் நேற்று அதிகாலை அங்கு சென்ற இனம் தெரியாத நபர்கள் பழுது பார்பதற்காக நிறுத்திவைக்கபட்டிருந்த 6 மோட்டார் சைக்கிள்களைத் தீயிட்டு எரித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக வாகனத் திருத்துமிடத்தின் உரிமையாளருக்கு தகவல் தெரியப்படுத்தப்பட்ட நிலையில், அவரால் சிதம்பரபுரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

முறைப்பாட்டுக்கமைய வவுனியா குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸ ாரினால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# ஐ.தே.க உறுப்புரிமை நீக்கத்துக்கு எதிரான மனு நேற்று நிராகரிப்பு

கொழும்பு, ஜூன் 23

முன்னாள் அமைச்சர் ரஞ்சித் மத்தும் பண்டார உள்ளிட்ட ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்கள் 99 பேரின் கட்சி உறுப்புரிமையை இரத்துச் செய்வது தொடர்பில் கட்சியின் செயற்குழுவினால் எடுக்கப்பட்டுள்ள தீர்மானத்துக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட இடைக்காலத் தடை உத்தரவைக் கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

முன்னாள் அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டாரவினால் தாக்கல் செய்யப்பட்ட மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த மனுவை ஜூலை மாதம் 27 ஆம் திகதி மீண்டும் விசாரணை செய்ய உத்தரவிடப்பட்டதுடன் மனுவின் பிரதிவாதிகளான ஐக்கிய தேசிய கட்சி தலைவர் மற்றும் பிரதித் தலைவர் ரவி கருணாநாயக்க ஆகியோருக்கு அழைப்பாணை அனுப்பவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

# சஜித்துக்கோ, அனுரவுக்கோ என்னை விமர்சிப்பதற்கு அருகதை கிடையாது

## சொல்கிறார் கருணா



கொழும்பு, ஜூன் 22

தனது கருத்து தொடர்பாக பேசுவதற்கு சஜித் பிரேமதாஸ வுக்கோ அல்லது அனுரகுமார திஸநாயக்கவுக்கோ எந்த அருகதையும் கிடையாது என்று, கருணா என்று அழைக் கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

சஜித் பிரேமதாவின் தந்தை யார் ரணசிங்க பிரேமதாஸ ஜனாதிபதியாக இருந்தபோது ஆயிரக்கணக்கான துப்பாக்கி களையும் ஒரு கோடிக்கும் அதிகமான தோட்டாக்களை யும் விடுதலைப் புலிகளுக்கு வழங்கி விடுதலைப்புலிகளை ஊக்குவித்தவர்.

அதேபோன்று அநுரகுமார திஸநாயக்க மக்கள் விடுதலை முன்னணி(ஜே.வி.பி) இயக் கத்தினர் சுமார் 80,000 சிங்கள மக்களை கொன்று குவித்தவர் கள். இவர்கள் இருவருக்கும் நான் தெரிவித்த கருத்து தொடர்பாக பேசுவதற்கு எந்த விதத்திலும் அருகதை கிடையாது.

உண்மையில் நான் வேண்டும் என்று அந்தக் கருத்தைக் கூறவில்லை. எனது தேர்தல் கூட்டத்தில் உரையாற்றுகையில் ஒரு நல்ல நோக்கத்துக்காக மக்கள் உண்மையை அறிந்து கொள்ளவேண்டும். உண்மையில் என்ன நடந்தது என்பதை அறிந்து கொள்வதற்காக நான் தெரிவித்த கருத்து அது.

உண்மையில் யுத்தத்தில் இரு தரப்புமே இழப்புகளைச் சந்தித்தது. பாதுகாப்புப் படையினரும் இறந்தனர். விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களும் இறந்தனர்.

அதில் ஒளித்து மறைக்க ஒன்றுமில்லை. அவ்வாறான கொடிய யுத் தத்தை வெற்றிகர மாக முடி வுக்குக் கொண்டு வந்தது தொடர் பாகவே நான் கருத்தைக் கூற முற்பட்டேன். என்னை ஹீரோவாகக் காட்ட முற்படவில்லை. நாட்டில் ஏற்பட்டுள்ள சமாதானம் நிலைக்கவேண்டும்.

கொடிய யுத்தம் இடம் பெற்றால் அழிவுகளும் இடம் பெற்றது. இதனால் இருதரப்பும் பல இழப்புக்களைச் சந்திக்கும் என்பதை சுட்டிக்காட்டியதாகவே எனது உரை இருந்தது.

ஆனால் அவ்வுரையை திரிபுபடுத்துகிறார்கள். அத்தகைய கொடிய போராட்டத்திலிருந்து ஜனநாயக வழிக்குத் திரும்பி என்னை இன்று விமர்சிக்க முற்படுகிறார்கள். கடந்த 10 வருடங்களுக்கும் மேலாக நான் ஜனநாயக வழிக்குத் திரும்பி அரசியல் கட்சியை ஆரம்பித்து நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்தவன்.

அப்போதெல்லாம் விட்டுவிட்டு இப்போது தென்னிலங்கையில் தாங்கள் சிங்கள வாக்குகளை பெற்றுக் கொள்வதற்காக என்னை விமர்சித்து, தமது தேவையை நிறைவேற்ற சிலர் முனைகின்றார்கள். அவர்களைப் பற்றி நான் ஒருபோதும் கவலைப்படப் போவதில்லை. ஏனெனில் உண்மை என்னவென்று, கருணா யார் என்பது, எப்படிப்பட்டவன் என தெரிய வேண்டியவர்களுக்கு நன்கு தெரியும். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச, பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஆகியோர் என்னைப் பற்றி நன்கு அறிந்து வைத்திருக்கிறார்கள்.

இந்த நாட்டை ஆளுகின்ற ராஜபக்ஷ குடும்பத்தினருக்கு கருணா யார் என்பது நன்கு தெரியும். அதனால் வெறுமனே வாக்குகளை பெறுவதற்காகச் சிலர் சில்லறைத்தனமான அறிக்கைகளை விட்டு வருவது வேடிக்கையாக இருக்கிறது. மீண்டும் சொல்கிறேன், இதைபற்றி நான் ஒருபோதும் அலட்டிக்கொள்ள போவதில்லை-என்றார்.

பாகம் – 24

தயாளன்

# கூட்டமைப்பின் உருவாக்கம் எப்படி நிகழ்ந்தது?

**மீண்டும் முறுகல்**

யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற உண்ணாவிரதம் தொடர்பானது. 1983 இனக்கலவரச் சூழ் நிலைகளுக்குப் பின் தென்னிலங்கைப் பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் தமிழ் பேசும் மாணவர்களை யாழ்ப்பாணம், மட்டக்களப்புப் பல்கலைக்கழகங்களுக்கு மாற்ற வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து இது நடத்தப்பட்டது. முதலில் சுழற்சி முறையில் என ஆரம்பித்துப் பின்னர் சாகும்வரை உண்ணாவிரதம் என மாற்றப்பட்டது. இந்த முடிவை எடுக்கும் முன்னரே இதை ஒழுங்குபடுத்தியவர்களிடம் ஜே.ஆர் இதற்கெல்லாம் மசியக்கூடிய ஆள் அல்ல. சாகும் வரை உண்ணாவிரதம் என்ற கட்டத்துக்குப் போகாதீர்கள் என அறிவுறுத்தினர் புலிகள். அத்துடன் தமது நிலைப்பாட்டைத் துண்டுப் பிரசுரம் மூலம் வெளியிட்டனர்.

ஆனால், ஏனைய இயக்கங்கள் மாணவரை உசுப்பி விட்டன. இந்த உண்ணாவிரதிகளில் நான்கு மாணவிகளும் அடங்குவர். நாட்செல்ல இந்த மாணவிகளில் ஒருவரான லலிதா என்பவருக்கு விக்கல் ஏற்பட்டது. அப்போதுதான் சூழ்நிலையின் விபரீதம் புரிந்தது. கண்ணீருடன் உண்ணாவிரதிகளின் பெற்றோர், உறவினர் சூழ இருந்தனர். முடிவெடுப்பதில் சிக்கல். ஏனெனில் இயக்கங்களின் எண்ணிக்கையைக் கணக்கிட இன்னொருவரின் விரல்களையும் இரவல் கேட்கவேண்டும். ஆனாலும் உண்ணாவிரதிகளைக் காப்பாற்ற வேண்டும் என முடிவெடுத்தனர் புலிகள். ரெலோவைக் கேட்டனர். அவர்கள் சம்மதித்தனர், புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ்வில் முடிவெடுக்கக் கூடியவர்களைக் காணவில்லை. அவர்களோடு தொடர்பு கொண்டு கேட்டால் சித்தாந்த விளக்கம் அளிப்பர். அது முடிய விடிந்து விடும். இங்கே ஆள் முடிந்து விடும். சில்லறை இயக்கங்களைக் கணக்கில் எடுக்க முடியாது. எனவே நடப்பது நடக்கட்டும் என முடிவெடுத்து அவர்களைக் கொண்டு செல்ல முயற்சித்தனர்.

இவர்களில் சிலர் தயங்குவதைக் கண்ட சுகந்தன் (ரவிசேகரம் ) கண்ணீருடன் கையெடுத்துக் கெஞ்சிக் கூப்பிட்டு அனைவரையும் ஒரு வேனில் ஏறவைத்தார். அடுத்த நாள் பிரச்னை ஆரம்பமாகிற்று. இதனைக் கண்டித்து ஈ.பி.ஆர்.எல்.எவ் , புளொட் சுவரொட்டிகளை ஒட்டின. புலிகளின் பிரமுகர்களைக் கண்டு "எமது தோழியர் இருவர் இதில் இருக்கின்றனர். அவர்களை எம்மிடம் ஒப்படைக்க வேண்டும்", என்றனர் ஈ.பி.ஆர்.எல்.எவ்வினர். அக்காலத்தில் இராணுவம், பொலிஸ் எல்லா இடங்களுக்கும் சென்றுவரக் கூடிய சூழல் இருந்தது. இதனைக் குறிப்பிட்ட புலிகள், "நாங்கள் அவர்களை வைத்திருக்குமிடம் வெளியே தெரிந்தால் பிரச்னையாகிவிடும். எனவே அவர்களை நாம் தமிழகத்தில் ஒப்படைக்கிறோம்", என்றனர். அதனை ஈ.பி.ஆர்.எல்.எவ்வினர் ஏற்கவில்லை. முரண்பாடு தோன்றியது. அடுத்த நாளும் இதே நிலைதான். எதற்கும் பொறுமை இழக்காத சந்தோஷமும் அதனை இழந்து விட்டார், "நீங்கள் செய்வதைச் செய்யுங்கோடா", என்று கூறி விட்டார். பத்திரமாக அனைவரும் தமிழகத்துக்கு அனுப்பப்பட்டனர் .

அவர்கள் சிகிச்சை முடிந்து ஓரளவு குணமானபின் ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் இரு தோழியரையும் அவர்களிடமே ஒப்படைக்குமாறு பிரபாகரன் சங்கரிடம் கூறினார். இந்த சங்கர் (சொர்ணலிங்கம்) பின்னர் புலிகளின் விமானப் படைத் தளபதியாக இருந்தவர். தமிழ் தகவல் மையம் (tamil information centre) என்று ஒரு செய்தி நிறுவனம் அப்போது சென்னையில் இருந்தது. எல்லா இயக்கத்தவரும் இந்த நிலையத்துக்குச் செய்தி வழங்குவர். மாநிலச் செய்திகளில் இந்த நிறுவனத்தை ஆதாரம் காட்டி இலங்கைச் செய்திகளைக் குறிப்பிடுவதுண்டு. பிரபலமான எல்லா இயக்கங்களும் தமது சார்பில் குறிப்பிட்ட ஒரு சிலரையே இங்கு அனுப்புவது வழக்கமாயிருந்தது. புலிகள் சார்பில் சங்கரே செல்வார். அவருக்கு ஈபி.ஆர்.எல்.எவ். சார்பில் செய்தி கொடுக்க வருபவரைத் தெரிந்திருந்தது. அவருடன் உரையாடுவது வழக்கமாயிருந்தது. அந்த நம்பிக்கையில் ஈ.பி.ஆர்.எல். எவ் அலுவலகத்துக்குச் சென்றார். அங்கு அவருக்கு அறிமுகமானவரே இருந்தார்.

**ஈ.பி.ஆர்.எல்.எவ்வுடன் போக மறுத்த தோழிகள்!**

"எங்கிருந்து வருகிறீர்கள்?" - இதுதான் முதல் கேள்வி. சங்கருக்கு ஆச்சரியம். தினந்தோறும் ஊடக மையத்தில் கண்டு உரையாடுபவர் இப்படிக்கேட்கிறாரே என்று. பொறுமையுடன் "ரைகேர்ஸ்ஸில் இருந்து" எனப் பதிலளித்தார்.

அடுத்த கேள்வி "எந்த ரைகேர்ஸ்ஸில் இருந்து" - பொறுமையிழந்து விட்டார் சங்கர். அந்தக் காலத்தில் புளொட்டும் தாங்களே உண்மையான ரைகேர்ஸ் என்று சொல்லிக்கொண்டு இருந்தது. எனவே சீண்ட வேண்டுமென்றே அந்தத் தோழர் இப்படிக் கேட்டார்.

"எந்த இயக்கத்துக்கு ரைகேர்ஸ் என்று கூற உரிமை இருக்கிறதோ அதிலிருந்துதான் வருகிறேன்", என்றார் சங்கர். தொடர்ந்தும் இடக்குமுடக்கான கேள்விகள் - ஆதலால் பதில்களும் அவ்வாறே சொல்ல வேண்டியிருந்தது. மொத்தத்தில் தோழியரை ஒப்படைப்பது பற்றித் தீர்மானமெடுக்க முடியவில்லை. சங்கர் பிரபாகரனிடம் வந்து நடந்த விடயத்தைச் சொன்னார்.

இந்த விடயம் அந்த தோழியரின் காதுக்கும் போயிற்று. "எங்களை ஒப்படைப்பதற்காகச் சென்ற சங்கர் அண்ணாவிடம் எங்களின் உடல் நிலை குறித்தே முதலில் அவர்கள் விசாரித்திருக்க வேண்டும். அதனை விடுத்துப் புலிகளோடு முரண்படுவதற்கும், தங்களது கௌரவத்தை நிலை நாட்டவுமே அவர்கள் முயல்கின்றனர். இவ்வாறானோரிடம் செல்ல நாங்கள் விரும்பவில்லை. நாங்கள் இங்கேயே இருக்கிறோம்", என்றனர்.


ஜனனி

பின்னாளில் மகளிர் படையணிக்கான பயிற்சிகள் ஆரம்பமானபோது அவர்களும் அதில் இணைந்து கொண்டனர். இவர்களுடன் லலிதா என்ற மாணவியும் சேர்ந்து கொண்டார். இவருக்கு ஜனனி என்ற இயக்கப்பெயர் சூட்டப்பட்டது. பின்னாளில் 'செஞ்சோலை' அமைப்புத் தொடக்கப்பட்ட போது அதன் பொறுப்பாளர் ஆனார். 'பெரியம்மா' என்று உறவு முறையால் அந்தக் குழந்தைகளால் அழைக்கப்பட்டார். 2008 பிற்பகுதியில் தனது பொறுப்பைத் தனக்கு அடுத்தவர்களிடம் ஒப்படைத்து விட்டுக் களமாடப் போனார். அங்கேயே அவரது வாழ்வு முடிந்தது.

**மாவீரர் நாள் பாடலுக்கு யோசனை!**

ஈ.பி.ஆர்.எல்.எவ்வில் இருந்து வந்த இரு தோழியரில் ஒருவருக்கு ஜெயா எனப் பெயர் சூட்டப்பட்டது. இவர் பின்னர் விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளராகச் சில ஆண்டுகள் பணியாற்றினார். இன்னொரு வரலாற்று முக்கியத்துவம் இவருக்கு உண்டு. 1992 ஆம் ஆண்டு நடைபெறவிருந்த மாவீரர் நாளுக்கான ஏற்பாடுகள் குறித்த முன்னோடிச் சந்திப்பு ஒன்று பிரபாகரன் தலைமையில் இடம்பெற்றது.

இதில் "மாவீரர்களின் பெற்றோரும், போராளிகளும் இணைந்து பாடக்கூடியதாக உணர்வுபூர்வமான ஒரு பாடலை இயற்றி இந்நிகழ்வில் பாட வேண்டும்", என்ற ஆலோசனையை முன் வைத்தார் இவர். உடனே புதுவை இரத்தினதுரை பெருவிரலை உயர்த்தி இந்த ஆலோசனையை வரவேற்றார். "உடனே அதைச் செய்வோம்", என்று கூறியபடியே புதுவை இரத்தினதுரையைப் பார்த்துத் தலையாட்டினார் பிரபாகரன். ஆண்டு தோறும் பல இலட்சக்கணக்கானவர்களின் கண்ணீரை வரவழைக்கக் கூடிய இப் பாடலை புதுவை இரத்தினதுரை இயற்ற, கண்ணன் இசையில் வர்ணராமேஸ்வரன் பாடினார். எப்படியோ இப் பாடல் உருவாக்கத்துக்கான யோசனையை முன் வைத்தவர் இவர்தான் என்பதை அச் சந்திப்பில் கலந்து கொண்டோர் என்றும் நினைவில் வைத்திருப்பர்.

மட்டக்களப்பின் வரலாற்றிலிலும் இவருக்கு ஒரு இடமுண்டு. மகளிருக்கான பயிற்சி முகாமை அங்கு அமைத்து. ஒரு படையணியை உருவாக்கியவர் இவர். இப் பயிற்சி முகாமில் உருவா னோரில் முக்கியமானவர் வாஸந்தி என்ற சுகுணா (இவர் பற்றிப் பிறகு பார்ப்போம் ) மாவீரர் நாள் தொடர்பான சந்திப்புப் பற்றி இன்னொரு விடயத்தையும் குறிப்பிட வேண்டும். இதுவரை மாவீரர்கள் பற்றி ஈழநாதம், விடுதலைப் புலிகள், சுதந்திரப் பறவைகள் என்பனவற்றில் வெளிவந்த கட்டுரைகளை அந்தந்தப் பிரிவுகள் அச்சிட்டு மாவீரர் பணிமனையின் பேரில் வெளியிட வேண்டுமென போராளி ஒருவர் கருத்துத் தெரிவித்தார்.

ஈழநாதத்தில் 'விழுதுகள்' என்ற தலைப்பில் பின்னர் மரணித்தவர்களான சு.ப.தமிழ்ச்செல்வன், காஸ்ரோ, வசந்தன், மலரவன் முதலானோரும் 'ஒரு போராளியின் குருதிச்சுவடுகள்' எனும் தலையங்கத்தில் 'விடுதலைப் புலிகளில்' வசந்தனும் சுதந்திரப்பறவைகளில் தமிழவள் முதலானோரும் எழுதியிருந்தனர். இக்கருத்தும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. விழுதுகள் தொடரில் லக்ஸ்மன் (ஆரையம்பதி - மட்டக்களப்பு) பற்றிய கட்டுரை உணர்வுபூர்வமாக இருந்ததெனவும் பொன். வேணுதாஸ் பற்றிய ஆக்கம் அவரது முக்கியத்துவத்தை மற்றவர்கள் அறியும் வகையில் இருந்ததாகவும் பிரபாகரன் குறிப்பிட்டார். பொன்.வேணுதாஸின் துணைவியாரின் படுகொலை குறித்து சிரித்திரனில் வெளிவந்த கட்டுரையையும், ஈழநாதத்தில் கதைவடிவத்தில் சின்ன பாலா எழுதியதையும் தான் படித்ததாகவும் இரு வடிவங்களும் நன்றாகவே இருந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

உண்ணாவிரதம் இருந்தோரில் நாலாமவர் மதிவதனி ஏரம்பு. இவரது உறவினர்கள் சென்னையில் இருந்தனர். எனவே அவர்களுடன் தொடர்பு கொண்டு இவரைக் கையளிக்க ஏற்பாடு செய்யுமாறு கூறினார் பிரபாகரன். இவரை ராகவன் அழைத்துச் சென்று அவர்களிடம் ஒப்படைத்தார். சுறுசுறுப்பான இடத்தில் பாலா அண்ணர், திருமதி பாலா, உண்ணாவிரதமிருந்த மற்ற மூவர் எனப் பலருடன் நன்றாகப் பழகிவிட்டு ஒரு வீட்டில் தனியாக அடைந்து கிடக்க அவருக்குப் பிடிக்கவில்லை. மூன்றாம் நாளே திரும்பி வந்துவிட்டார். பின்னாளில் இவரே பிரபாகரனின் வாழ்க்கைத் துணையானார். மூன்று குழந்தைகளின் தாயானார். இதற்கு மேல் விபரிக்கத் தேவையில்லை.

• • •

**புலிகளில் பழிபோட கொள்ளையடித்த ஈ.பி.ஆர்.எல்.எவ்!**

மூன்றாவது முரண்பாடு மட்டக்களப்பில் ஏற்பட்டது. மகிழடித்தீவில் செரண்டிப் என்ற பெயரில் ஒரு நிறுவனம் இருந்தது. கொக்கட்டிச்சோலைப் பகுதியைச் சேர்ந்த அனேகர் இங்கே தொழில் வாய்ப்புப் பெற்றனர். இங்கு பிரஜைகள் குழுப் பிரமுகரான சாம். தம்பிமுத்துவும் வெளிநாட்டவரும் இணைந்து இறால் வளர்ப்பில் ஈடுபட்டனர். ஒருநாள் இரவு இந்த இறால் பண்ணையில் கொள்ளை நடந்தது. மோட்டர்கள் முதலான பெறுமதியானவற்றை ஆயுதமுனையில் கொள்ளையிட்டவர்கள் தோணிகளில் அவற்றை ஏற்றி வாவி வழியாகக் கொண்டு சென்றனர்.

கொள்ளை நடந்த அடுத்தநாள் காலை ஈ.பி.ஆர்.எல்.எவ். உறுப்பினர் குணம் என்பவர் சைக்கிளில் வந்த புலிகள் உறுப்பினர் பசீரை வழிமறித்து இரவு நடந்த விடயத்தைக் கூறினார். மேலும் "தோழர்! கொள்ளையடிக்க வந்தவர்கள் சில பணியாட்களைத் தாக்கியுள்ளனர். அத்துடன் தூஷண வார்த்தைகளால் திட்டியுள்ளனர். இதெல்லாம் மோசமான வேலை", என்றார். அதற்குப் பசீர் "உண்மைதான் மட்டக்களப்பைப் பொறுத்தவரை தூஷண வார்த்தைகளைப் பயன்படுத்துவதென்றால் அது புளொட்டின் வேலையாகத்தான் இருக்கும். அவர்களிடம் இதைப்பற்றிக் கேட்டால் முரண்பாடுதான் ஏற்படும்", எனக்கூறிவிட்டு நகர்ந்தார்.

(நாளையும் வரும்)

உலகச் செய்திகள்



'சாரிட்டி பிக்சர்ஸ்' பருவ இதழுக்காக சிவிங்கிப் புலிகளை (Cheetahs) ஒளிப்படம் எடுக்கும் போட்டி நடத்தப்பட்டது.

2,400 இற்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் பங்கேற்ற இந்தப் போட்டியில் 10 வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

சிவிங்கிப் புலிகளைப் பாதுகாப்பை வலியுறுத்தி இந்தப் போட்டி நடத்தப்பட்டது. நமீபியா, கென்யா காடுகளில் அதிகளவில் வாழ்ந்த சிவிங்கிப் புலிகள் இன்று 7,000 ஆக குறைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

பிரிட்டனில் மூவரை பலியெடுத்த தாக்குதல்

# பயங்கரவாதிகளின் கவனத்தை ஈர்ப்பதற்காக நடத்தப்பட்டதாம்!

லண்டன், ஜூன் 22

இங்கிலாந்தின் தென்புற நகரான ரெடிங்கின் போர்பரி பூங்காவில் கடந்த சனிக்கிழமை நடத்தப்பட்ட தாக்குதலில் மூவர் உயிரிழந்தனர்.

இந்தத் தாக்குதலை நடத்தியவர் லிபியா நாட்டைச் சேர்ந்த கைரி சைதல்லா (25 வயது) என்றும், அவரைத் தாம் கைது செய்தனர் என்றும் பிரிட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதலை நடத்தியவர் 16 நாட்களுக்கு முன்பு சிறையில் இருந்து விடுதலையானார். 2018 ஆம் ஆண்டு வன்முறையில் ஈடுபட்டமைக்காக அவர் சிறைத் தண்டனைக்கு உள்ளானார். விடுதலையாவதற்கு முன்னர் மன உளைச்சல் மற்றும் உளவியல் ரீதியான பிரச்னைகளுக்காக சிகிச்சை பெற்றிருந்தார்.

சிரியாவுக்கு செல்ல வேண்டும் என்ற இவரது ஆர்வம் காரணமாக கடந்த ஆண்டு சில மாதங்கள் இங்கிலாந்தின் உளவு அமைப்பின் கண்காணிப்பு வட்டத்தில் இருந்துள்ளார். ஆனாலும், இவர் 5 ஆண்டுகள் பிரிட்டனில் தங்கியிருக்க அனுமதி அளிக்கப்பட்டது. வன்முறைக்கான குற்றச்சாட்டுகளும் உளவியல் பிரச்னையும் உள்ள ஒரு இளைஞரை இங்கிலாந்து ஏன் மேலும் 5 ஆண்டுகள் தங்கிக் கொள்ள அனுமதித்தது என்ற கேள்வி தற்போது முன்வைக்கப்படுகிறது.

ஆனால் லிபியாவில் பயங்ரவாதிகளின் ஆதிக்கம் அதிகரித்து வருவதால், சைதல்லா அங்கிருந்து தப்புவதற்காக இங்கிலாந்து வந்தார் என்றும் அவர் கிறிஸ்தவ மதத்தை தழுவினார் எனவும் உறவினர்கள் கூறுகின்றனர்.

# 2,600 வருடத்தின் முன் கீழடி தொழில் நகரம்!

தோண்டத் தோண்ட வெளிவரும் ஆச்சரியம்



சென்னை, ஜூன் 22

கீழடி அகழாய்வில் தொழிற்கூட அமைப்பு கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகக் கூறப் படுகின்றது. இதன்படி 2,600 வருடங்களுக்கு முன்னர் இது தொழில் நகரமாக இருந்திருக்க வாய்ப்பு உள்ளது என ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

தமிழ்நாடு, திருப்புவனம் அருகே கீழடி, கொந்தகை, அகரம், மணலூர் ஆகிய இடங்களில் பெப்ரவரி 19 ஆம் திகதி 6 ஆம் கட்ட அகழாய்வு பணி தொடங்கியது. மார்ச் இறுதியில் கொரோனா ஊரடங்கால் நிறுத்தப்பட்ட அகழாய்வுப் பணி மீண்டும் மே 20 ஆம் திகதி மீள ஆரம்பித்தது.

மணலூரில் நடந்த அகழாய்வில் சுடு மண்ணாலான உலை, கீழடியில் விலங்கின் எலும்பு, தண்ணீர் செல்வதற்கான வடிகால் அமைப்பு, கொந்தகையில் முதுமக்கள் தாழிக்குள் மனித எலும்பு, 2,600 ஆண்டுகளுக்கு முந்தைய குழந்தையின் முழு உருவ எலும்புக்கூடு, அகரத்தில் நடந்த அகழாய்வில் மண்பானைகள், 17 ஆம் நூற்றாண்டு தங்க நாணயம் எனப் பல பொருட்கள் கண்டெடுக்கப்பட்டன.

இந்நிலையில், கீழடியில் 13 அடி நீள தொழிற்கூட அமைப்பு தற்போது கண்டறியப்பட்டுள்ளது. அதன் அருகே நெருப்பு மூலம் இரும்பு உள்ளிட்டவற்றை பயன்படுத்தி பொருட்கள் தயாரித்ததற்கு அடையாளமாக கறுப்பு நிற சாம்பல் துகள்கள் இருந்தன. கீழடி, அக்காலத்தில் தொழில் நகரமாக இருந்ததற்கான ஆதாரங்கள் தொடர்ந்து கிடைத்து வருகின்றன.

# தென்கொரியாவுக்கு பதிலடியாக ஒரு கோடி துண்டுப் பிரசுரங்கள்!

பியோங்யோங், ஜூன் 23

தென் கொரியாவின் பிரசாரங்களுக்குப் பதிலடி கொடுக்க ஒரு கோடியே 20 இலட்சம் துண்டுப் பிரசுரங்களையும் ஆயிரக்கணக்கான பலூன்களையும் அனுப்பப் போவதாக வடகொரியா அறிவித்துள்ளது.

வட கொரியாவிலிருந்து தென் கொரியாவுக்குத் தப்பிச் சென்றவர்கள் மற்றும் தென் கொரியாவில் உள்ள ஜனநாயக ஆர்வலர்கள் வடகொரியத் தலைவர் கிம் ஜோங் உன் மேற்கொள்ளும் ஜனநாயக விரோத செயற்பாடுகளைக் கடுமையாக விமர்சிக்கும் துண்டுப்பிரசுரங்களை பலூன்களில் இணைத்து வட கொரிய எல்லைக்குள் அண்மையில் அனுப்பிவைத்தனர். மனித உரிமைகளை கிம் தொடர்ந்து மீறி வருவதாகவும் அணுவாயுதங்களை உருவாக்குவதில் குறியாக இருப்பதாகவும் அந்தத் துண்டுப் பிரசுரங்களில் விமர்சிக்கப் பட்டிருந்தது.

இதையடுத்து தென் கொரியா மீது அறிவிக்கப்படாத போரை ஆரம்பித்துள்ள வடகொரியா, அந்நாட்டுடனான தொடர்பை துண்டித்ததுடன், எல்லைக்கு படைகளையும் அனுப்பியது. இந்நிலையிலேயே துண்டுப்பிரசுரங்களை அனுப்பவுள்ளதாக அறிவித்துள்ளது.



# ஜப்பானுக்குள் நுழைந்த மர்ம நீர்மூழ்கிக் கப்பல்

ஜப்பான் நாட்டில் அமாமி தீவு பகுதியில் கடந்த 18 ஆம் திகதி அடையாளம் தெரியாத நீர்மூழ்கி கப்பல் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. இந்தக் கப்பல் அந்த தீவின் வட, கிழக்கு பகுதியில் தொடர் மண்டலத்தில் காணப்பட்டது.

இதன் பின்னர், அந்த கப்பல் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை யோகோயேட்-ஜிமா தீவின் மேற்கு பகுதியை நோக்கி நகர்வது தெரியவந்தது.

இதையடுத்து அந்த கப்பலை கண்காணித்து, அது குறித்த தகவல்களை சேகரிக்குமாறு இராணுவத்துக்கு ஜப்பான் பாதுகாப்பு அமைச்சர் டாரோ கோனோ உத்தரவிட்டுள்ளார்.

உடனே ஒரு கவாசாகி ரோந்து விமானம், லொக்ஹீட் 3 நீர்மூழ்கி கப்பல் தடுப்பு மற்றும் கடலோர கண்காணிப்பு விமானம், 3 ரோந்து கப்பல்கள் குறித்த நீர்மூழ்கியை பின்தொடர்கின்றன.

# சீறத் தொடங்கியது எரிமலை இந்தோனேசியா எச்சரிக்கை!

ஜகார்த்தா, ஜூன் 23

இந்தோனேசியாவில் மெராபி எரிமலைச் சீறத் தொடங்கியுள்ளது. இதனால், அப்பகுதி ஊடாக பறக்கும் விமானங்களுக்கு எச்சரிக்கை அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இந்தோனேசியாவின் ஜாவா தீவில் 2,930 மீற்றர் உயரமுள்ள மெராபி எரிமலைச் சிகரம் அமைந்துள்ளது. இந்த எரிமலை நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை எரிமலைக் குழம்புகளை வெளியேற்றி சீறத் தொடங்கியது.

அதிலிருந்து வெளியான சாம்பல் புகை மண்டலமானது வானத்தில் 6 கிலோமீற்றர் உயரத்திற்கு பரவியுள்ளது. இதையடுத்து அருகே வாழும் மக்கள் அது அமைந்துள்ள இடத்திலிருந்து மூன்று கிலோ மீற்றர் தூரத்திற்கு உள்ளே நுழையக் கூடாதென்று தடை விதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் அந்தப் பகுதியில் விமானங்கள் எதுவும் பறக்க கூடாதென்று சிவப்பு எச்சரிக்கை அறிவிப்பும் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த எரிமலையானது கடந்த ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி எரிமலைக்குழம்பை சீறி வெளித்தள்ளியபோது, சுமார் 3 கிலோமீற்றர் உயரத்திற்கு வானத்தில் சாம்பல் புகை பரவியது என்பது குறிப்பிடத்தக்கது

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிரைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 23.06.2020 அன்று வெளியிடப்பட்டது.